நியமனப் படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை இரண்டு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதும் இருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

### 3. மாற்றுத் தலைவர் பட்டியல்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட மேலவையின் 51-வது கூட்டத் தொடருக்கு, கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு மேலவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. மு. இராமநாதன்;
2. திரு. எல். பலராமன்;
3. திரு. எஸ். நாராயணசாமி;
4. திரு. பி. ஆர். தாமஸ்.

### 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975).

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்

என்று முன்மொழிகிறேன்.

---

@ 126 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.